**<u>சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி</u>**

முன்னிலை: திரு.R. பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி
2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17–ம் நாள் திங்கட்கிழமை

**<u>ஐ.எ.எண். 01/2025</u> இன்**
**<u>ஓ.எஸ்.எண்.338/2023 [CNR No.TNMD240004712023]</u>**

சின்னராஜா ... மனுதாரர் / வாதி

/ எதிரிடை /

1. சிவகாமி
2. புஷ்பம் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

3. சுதந்திராதேவி ... 3ம் எதிர்மனுதாரர் / 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டியவர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 11.08.2026ம் தேதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் / வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.C. பாலச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.J. வினோதன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.V.K. ஜெயச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு விவாதமும் கேட்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர் / வாதி தரப்பில் அசல் வழக்கில் 3ம் எதிர்மனுதாரரை 3ம் பிரதிவாதியாக சேர்க்கக் கோரி உரிமையியல் விசாரணை

நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2)ன் கீழ் மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் / வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். தாவா வழக்கானது எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாவா வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவாச் சொத்துக்களில் உள்ள மனுதாரருக்குண்டான பாகத்தை நயமிடர் பார்த்து அளந்து பிரித்து சுவாதீனம் ஒப்படைக்கும்படி தாவா வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவாச் சொத்துக்கள் பிரிவினையில்லாத பொதுக்குடும்ப சொத்துக்கள் என்றும், தாவா வழக்கில் கட்டுப்பட்ட சொத்துக்களில் 2வது இலக்க சொத்தினை 1ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 11.04.2025ம் தேதி விற்பனை செய்துள்ளார் என்றும், அந்த விபரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரியவந்தது என்றும், எனவே அவர் இவ்வழக்கில் அவசியமான நபர் என்றும், எனவே மேற்படி நபரை வழக்கில் சேர்த்து தீர்ப்பாணை பெறாவிட்டால் தாவாச் சொத்துக்களைப் பங்கீடு செய்வதில் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமும், நியாயமுமானது என்றும், மனுதாரர் மனுவினை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் / 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரை சுருக்கம்:**

1, 3 எதிர்மனுதாரர்கள் / 1, 3 பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

வாதியானவர் அவரது வளர்ப்பு தந்தையான லட்சுமணன் மூலம் 1–ம் பிரதிவாதியிடம் ½ பாகச் சொத்தை பிரிக்கச் சொல்லி 1–ம் பிரதிவாதியிடம் கேட்டதாகவும், அதற்கு அவர் பாகம் பிரித்துக் கொடுக்க மறுத்ததாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. 2–ம் பிரதிவாதி தாவா சொத்துக்களின் மீதும் அவர் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உரிமை கோர முடியாது என்றும், அதன் மீது எந்த ஒரு உத்தரவும் பெற முடியாது என்பதும் உண்மைக்கு புறம்பானதாகும். வாதி பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த இம் மனு சட்டத்திற்கு புறம்பானதாகும்.

மேற்படி தங்கமணிக்கும், தங்கமணியின் முதல் மனைவியான வனராணிக்கும் திருமணம் முடிந்து வனராணியுடன் சுமார் 16 வருடங்களாக வாழ்க்கை நடத்தியதில் மேற்படி தங்கமணி மூலம் வனராணிக்கு கருஉருவாகி குழந்தை ஏதும் பிறக்கவில்லை என்பது நிஜத்தமான உண்மையாகும். வனராணி இறந்த பின்பு இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதிக்கும் மேற்படி தங்கமணிக்கும் 2000–ம் வருடம் உசிலம்பட்டி பெருமாள் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றும், திருமணம் முடிந்த ஒரு மாதத்தில் இருவரும் ஆந்திரா மாநிலம் ஹைதராபாத்தில் உள்ள சாத்நகர், வெங்கட்ரமாணா காலனியில் முறுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளார்கள் என்றும், அங்கு வீடு கட்டியும், 1–ம் பிரதிவாதியும் அவரது கணவரான தங்கமணியும் இருவரும் சேர்ந்து சம்பாதித்து வீடு கட்டி தொடர்ந்து அங்கேயே குடியிருந்து வந்துள்ளார்கள்.

கூட்டுக்குடும்ப அபிபக்த முறையில் 1–ம் பிரதிவாதியும், அவரது கணவரான தங்கமணியும் கணவன் மனைவியாக இருந்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு 1–ம் பிரதிவாதியின் கணவரின் பெயரில் பிராதில் கண்ட 3 இலக்கச் சொத்துக்களும் 1–ம் பிரதிவாதியின் சம்மதத்தின் பேரில் கிரையம்

பெற்று இருவரும் கணவன் மனைவியாக சேர்ந்து அனுபவித்து வந்துள்ளார்கள் என்றும், 3–ம் இலக்க சொத்தை பொருத்து 1–ம் பிரதிவாதியும், அவரது கணவரும் சேர்ந்து காலியிடத்தை கிரையம் பெற்று அதன் பின்பு அதில் வீடு கட்டி கணவன் மனைவியாக குடியிருந்து வந்தார்கள் என்றும், 1ம் பிரதிவாதியின் கணவர் தங்கமணி கடந்த 17–05–2021 அன்று காலமான பின்பு இன்று வரை 3 இலக்கச் சொத்துக்களையும் 1–ம் பிரதிவாதி மட்டும் அனுபவம் செய்தும், 3வது இலக்கச் சொத்தில் குடியிருந்தும் வருகிறார்.

2–வது இலக்க காலியிடமானது 3ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே குடியிருந்து வரும் வீட்டிற்கு அருகே உள்ளது என்றும், இந்த இடத்தை 1–ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் மேற்படி சொத்தை கிரையம் பெற்றுக்கொள்ள தொடர்ந்து வழியுறுத்தி வந்தார் என்றும், 1–ம் பிரதிவாதியிடம் 2–ம் இலக்க சொத்திற்கு உண்டான ஆவணங்களை இந்த 3–ம் பிரதியானவர் முறையாக பெற்று பார்வை செய்துள்ளார் என்றும், 1–ம் பிரதிவாதியின் கணவரான லேட்.தங்கமணி கடந்த 25–04–2012–ம் தேதி அன்று உசிலம்பட்டி சார்பதிவாக ஆவண எண் 1847/2012–ன் படி நடராஜன் என்பவரிடம் கிரையம் பெற்ற ஆவணத்தையும் பார்வை செய்தார். அதன் பின்பு 1–ம் பிரதிவாதியின் கணவரான தங்கமணி கடந்த 17–05–2021–ம் தேதி அன்று இறந்து விட்டார் என்பதற்கான இறப்பு சான்றிதழ் ஆவணங்களை பார்வை செய்தும் மேலும் வாரிசு சான்றிதழை பார்வை செய்த போது கடந்த 28–03–2022–ம் தேதி அன்று உசிலம்பட்டி வட்டாச்சியரால் கொடுக்கப்பட்ட வாரிசு சான்றிதழ் எண்:TN–720210619611–ன்படி 1–ம் பிரதிவாதியும் இறந்து போன தங்கமணியின் தாயரான கருப்பாயி அம்மாளும் வாரிசாக காட்டப்பட்டுள்ளதை இந்த பிரதிவாதி பார்வை செய்துள்ளார் என்றும், அதன் பின்பு மேற்படி கருப்பாயி அம்மாள் இறந்து விட்ட விபரத்தையும் அவரது இறப்பு

சான்றிதழையும் பார்வை செய்தும் மேலும் மேற்படி இறந்து போன தங்கமணியின் மனைவியான 1வது பிரதிவாதியின் ஆதார் அட்டையையும் பார்வை செய்தும், தொடர்ச்சியாக 70 ஆண்டுகளுக்கு மேல் வில்லங்க சான்றிதழை பார்வை செய்ததில் இந்த பிராதில் கண்டுள்ள 2-வது இலக்க சொத்தில் யாதோரு வில்லங்கமும் இல்லை என்பதை இந்த மூன்றாம் பிரதிவாதியானவர் தெரிந்து கொண்டார்.

அதன் பின்பு இந்த 3-ம் பிரதிவாதியானவர் கடந்த 11-04-2025-ம் தேதி அன்று 1-ம் பிரதிவாதியிடம் இருந்து உசிலம்பட்டி சார்பதிவக ஆவண எண்1598/2025-ன் படி எந்த வில்லங்கமும் இல்லாததால் கிரையம் பெற்று வருவாய்துறை மூலம் பட்டா மாறுதல் செய்தும், தொடர்ந்து 2-ம் அயிட்ட சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றும், பிராதில் கண்ட 2வது இலக்க சொத்திற்கு தென்புறத்தில் இந்த 3-ம் பிரதிவாதி கடந்த 25 ஆண்டுகளாக குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்றும், 1-ம் பிரதிவாதியின் கணரான இறந்த போன தங்கமணி கடந்த 25-04-2012-ம் தேதியன்று கிரையம் பெற்ற மேற்படி 2-ம் இலக்க சொத்தை மராமத்து செய்யவரும் போது மேற்படி இடத்திற்கு சரியான பாதை இல்லை என்றும், 3-ம் பிரதிவாதி அருகில் உள்ளதால் அவருக்கு மேற்படி சொத்தை கிரையம் கொடுக்க தயாராக இருப்பதாகவும், மேலும் தனது முதல் மனைவி வனராணி இறந்து விட்டதாகவும், அவருக்கு வாரிசு ஏதும் இல்லை என்றும், வனராணி இறந்த பின்பு இந்த 1-ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டதாகவும், அவருக்கும் வாரிசு ஏதும் இல்லை என்றும், மேலும் சட்டப்படி யாரையும் வாரிசாக தத்து எடுத்து வளர்க்கவில்லை என்றும், இந்நிர் 3-ம் பிரதிவாதியிடமும் அவரது கணவர் மற்றும் அருகில் உள்ளவர்களிடமும் தெரிவித்துள்ளார்.

3–ம் பிரதிவாதிக்கு கனம் நீதிமன்றத்திலிருந்து 3–ம் தரப்பினராக சேர்க்க கோரி வாதி மனு தாக்கல் செய்துள்ள விபரத்தை தெரிந்து கொண்ட பின்பு 1–ம் பிரதிவாதியின் கணவர் தங்கமணி இந்நிர் 3–ம் பிரதிவாதியிடமும் தனது கணவரிடமும், சொன்ன விஷயம் உண்மைதான என்று தெரிந்து கொள்ள வாதியின் ஊரில் சென்று கேட்ட போது இறந்து போன வாதியின் கணவரான தங்கமணியின் தகப்பனார் கனியன் சின்னாத்தேவர் என்பவருக்கு 1.பாப்பாத்தி, 2.வாதியின் கணவரான லேட்.தங்கமணி, 3. லட்சுமணன், 4.முருகன், 5.சின்னபொன்னு ஆகியோர்கள் வாரிசு ஆவார்கள் என்றும், மேற்படி தங்கமணி 22 ஆண்டுகளுக்கு முன்பு வனராணி என்பவரை முதல் திருமணம் செய்துள்ளார் என்றும், மேற்படி தங்கமணி, மூலமாக வனராணிக்கு வாரிசு ஏதும் இல்லாமல் இறந்து விட்டார் என்றும், அதன் பின்பு மேற்படி தங்கமணி இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதியை கடந்த 20 வருடங்களுக்கு முன்தாக முதல் மனைவி இறந்த பின்பு திருமணம் செய்துள்ளார் என்றும், தங்கமணிக்கும், அவரது மனைவியான 1–ம் பிரதிவாதிக்கும் வாரிசு ஏதும் இல்லை.

இந்த வழக்கினுடைய வாதியின் தகப்பனார் லட்சுமணன் தாயார் வாசுகி ஆவார் என்றும், மேற்படி லட்சுமணன் 1–ம் பிரதிவாதியின் கணவரான தங்கமணியின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். 1–ம் பிரதிவாதிக்கும், தங்கமணிக்கும் குழந்தை ஏதும் இல்லததை தெரிந்து கொண்ட வாதியும், அவரது தகப்பனரான லட்சுமணனும் சேர்ந்து கொண்டு 1–ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் தனது தகப்பனார் லட்சுமணன் தாயார் வாசுகி பிறந்ததை மறைத்து மேற்படி தங்கமணிக்கும் அவரது முதல் மனைவி வனராணிக்கும் பிறந்துள்ளதாக சொல்லி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், இதை இந்த 3–ம் பிரதிவாதியானவர் உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட

பிறப்பு சான்றிதழில் லட்சுமணன் வாசுகி இவர்களது மகன் சின்னராஜா என்று சொல்லப்பட்டுள்ள விபரத்தையும் ஆவணம் மூலம் தெரிந்து கொண்டுள்ளார்.

தாவா வழக்கின் வாதியானவர் துஷ்டநடத்தை கொண்டவர் கஞ்சா வழக்கு மற்றும் அவரது மனைவி இறந்து போனதற்கு வாதி தான் காரணம் என்ற வழக்கும் மேலும் வாதி, அவரது உறவினரை தாக்கிய வழக்கும் நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி இறந்து போன தங்கமணியின் தகப்பனாரான கனியன் சின்னாத்தேவருக்கு பாப்பாத்தி, 1–ம் பிரதிவாதியின் கணவரான தங்கமணி, லட்சுமணன், முருகன், சின்னப்பொன்னு ஆகியோர்கள் மக்களாவார்கள் என்றும், மேற்படி தங்கமணி என்பவர் லட்சுமணனுக்கு உடன் பிறந்த மூத்த சகோதரர் என்றும், இதில் மேற்படி லட்சுமணன் என்பவர்தான் வாதியின் தகப்பனார் ஆவார் என்பது உண்மையாகும். மேற்படி லட்சுமணனும், வாதியும் கூட்டு சதி செய்து இறந்துபோன தங்கமணிக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் குழந்தை ஏதும் குழந்தை பிறக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டு மேற்படி தங்கமணிக்கும், அவரது முதல் மனைவியான வனராணிக்கும் பிறந்த குழந்தை வாதி என்று பொய்யாக எடுத்துரைத்து சட்டத்திற்கும் நியாயத்திற்கும் எதிராக சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் வாதியும் அவரது தகப்பனாரான லட்சுமணனனும் சேர்ந்து கொண்டு இவ்வழக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

வாதியின் தகப்பனார் சின்னராஜா தாயார் வாசுகி இவர்கள் இருவருக்கும் பிறந்த குழந்தைதான் வாதியாவார். மேற்படி வாதி கடந்த 12–05–1992 அன்று உசிலம்பட்டியிலுள்ள விநாயகா நர்சிங் ஹோம், சத்தியசீலன் தெருவில் உள்ள மருத்துவமனையில் பிறந்துள்ளார். 1–ம் பிரதிவாதியின் ஆதார் அட்டையில் 1–ம் பிரதிவாதியின் பெயர் மட்டும்தான் உள்ளது. இவ்வழக்கிற்காக வாதியின்

அனுபவித்து வரும் 2-ம் அயிட்ட சொத்தையும் அபகரிப்பதற்காக தந்தை மற்றும் தாயையும் மாற்றி இந்த வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

வாதியும், அவரது தகப்பனாரான லட்சுமணனும் சேர்ந்து கொண்டு, 1-ம் பிரதிவதியும், அவரது கணவரான இறந்து போன தங்கமணியும் சேர்ந்து சம்பாதித்து வாங்கிய பிராதில் கண்ட சொத்துக்களை மோசடி செய்ய எத்தனித்து வருகிறார்கள். வாதிக்கும் அவரது தாய், தகப்பனாரன லட்சுமணன்-வாசுகி இவர்களுக்கு மரபணு சோதனை (DNA) நடத்தினால் மேற்படி நபர்கள் பெற்றோர் என்ற உண்மை நிலை தெரியவரும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவின்படி 3ம் எதிர்மனுதாரரை உத்தேசிக்கப்பட்ட 3ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுவும், எதிருரையும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

**4. தீர்மானிக்க வேண்டிய விசயம்:**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது, அனுமதிக்கத்தக்கதா? அல்லது இல்லையா?

**5. பிரச்சனைக்குரிய தீர்வு:-**

இருதரப்பு வாதங்களையும், மனு, எதிருரை சங்கதிகள் மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்ததில் இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்க்கக்கோரி இம்மனுவானது மனுதாரர் / வாதியால் கடந்த 16.09.2025ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, அன்றையதினமே கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

6. அசல் வழக்கில் தாவா வழக்கில் கட்டுப்பட்ட சொத்துக்களில் 2வது இலக்க சொத்தினை 1ம் எதிர்மனுதாரர் இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரருக்கு

கடந்த 11.04.2025ம் தேதி விற்பனை செய்துள்ளார் என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் அவசியமான நபர் என்பதால் 3ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்து தீர்ப்பாணை பெறாவிட்டால் தாவாச் சொத்துக்களைப் பங்கீடு செய்வதில் பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், எனவே 3ம் எதிர்மனுதாரரை தாவா வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமும், நியாயமுமானது என மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ள நிலையில், அதனை ஏற்கும் விதமாக எதிர்மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரை உத்தேசிக்கப்பட்ட 3ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடுமாறு அவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் குறிப்பிட்டுள்ள நிலையில் 3ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்தினால் தான் அசல் வழக்கில் இறுதியான தீர்வு எட்டமுடியும் என்பதால் மனுதாரர் மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7. முடிவில் மனுதாரர் மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு, நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்து பார்த்து, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.17 15:13:32 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**<u>இரு தரப்பிலும் எவ்விதமான சாட்சியமும், சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படவில்லை.</u>**

RENGANATHAN BARATHIRAJA

Digitally signed by RENGANATHAN BARATHIRAJA
Date: 2026.08.17 15:13:38 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**உத்தரவு**

**<u>ஐ.எ.எண். 01/2025</u>**

**இன்**

**<u>ஓ.எஸ்.எண்.338/2023</u>**

நாள் – 17.08.2026.

சார்பு நீதிமன்றம்,

உசிலம்பட்டி.